978

…roved by the Text-Book Committee, Madras.

பாலர் தமிழ் வாசகம்

இரண்டாம் புத்தகம்

22 AUG 1934
MADRAS

V. S. VENKATARAMAN & Co.,
Educational Publishers.
KUMBAKONAM



0-,6x
N34
77519

பாலர் தமிழ் வாசகம்

இரண்டாம் புத்தகம்

பதிப்பாசிரியர் :

திருவாளர் அ. கந்தசாமிப் பிள்ளை,

தமிழ் விரிவுரையாளர்,

துரைத்தன மகம்மதியர் காலேஜ், சென்னை.

V. S. வெங்கடராமன் கம்பெனி,

பப்ளிஷர்ஸ் : : கும்பகோணம்.

பதிப்புரிமை] 1934 [விலை அணு 3

THE ROYAL PRINTING WORKS
MOUNT ROAD : : MADRAS.

PUBLISHERS' NOTE

—: (o) :—

This series of Balar Tamil Readers embody a new method in which nursery rhymes, nursery stories and cradle songs are made the main vehicle for reading, writing and conversation which are the three-fold aim of the study of the mother tongue in the lower classes. In following this psychological and active method, children's experiences at home, in school and in their immediate neighbourhood are the principal topics dealt with in Readers II and III of this series, and the vocabulary also is so selected that the words used are already familiar to the children, with the result that difficult words which are not within the ken of little boys and girls, which require elaborate explanation and which in consequence retard progress and fluency in reading are avoided with special care. Thus reading and writing are made easy and pleasant, and greater progress is made possible in each class. Another feature of these readers is that more of children's stories, dialogues and conversations are introduced which the pupils can act, and so develop a correct speech-feeling.

So far as the teaching of the mother tongue is concerned, elementary education up to Standard V may be said to comprise of three distinct stages. In Standard I the children are to be helped to identify the letters of the alphabet which are familiarised through pictures, simple words and short sentences. In Standards II and III which mark the second or the transition stage, the main aim is to help the pupils to surmount the mechanical difficulties in reading, writing and conversing so as to gain fluency. To facilitate this purpose it is a

sound principle that words of high frequency alone should first be introduced, and this is well kept in view in these readers. To read as well as to write easy letters of communication is also one of the aims at this stage, and so practice in letter-writing is given copiously in this series.

When the pupils come to the third stage which covers Standards IV and V, they have attained a certain amount of fluency and mastery in reading and writing and they have now a wider outlook as their mental powers have developed further. Hence in these higher classes, the lessons and the vocabulary can go beyond the pupils' immediate experience. It is, therefore, possible at this stage to include topics extending beyond their home-lands to national and inter-national interests. Thus, Readers IV and V in this series are prepared so as to pave the way for creating a reading habit in the pupils so that when they grow up, they may read a vernacular daily, follow world events, and exercise their franchise properly which is defined by the Hartog Committee as the main purpose of elementary education.

This series of Tamil Readers thus stand for certain new principles and methods. It is hoped that these merits will commend themselves to the Headmasters and Managers of schools, and that these books will be widely introduced in their institutions.

We take this opportunity of tendering our sincere thanks to M. R. Ry. A. Kandaswami Pillai Avl., Lecturer in Tamil, Govt. Muhammadan College, Madras, for the great help he has rendered us in bringing out this series of Readers, and for being their editor.

V. S. VENKATARAMAN & CO.,

PUBLISHERS, KUMBAKONAM.

முன்னுரை

மாணவர்களின் மனப்பான்மைக் கேற்றனவாய், உற்சாகத்தைத் தரவல்ல குழந்தைப் பாட்டு, கதை, சம்பாஷணை இவைகள் மூலமாய்த் தாய்மொழியில் திருத்தமாகப் பேசவும், படிக்கவும், எழுதவும் போதிப்பது ஓர் புதிய சிறந்த முறையாகும். இப்புதிய முறையைத் தழுவி இந்தப் பாலர் தமிழ் வாசகங்கள் எழுதப்பட் டிருக்கின்றன.

இரண்டாவது மூன்ருவது வகுப்புக்களில் இளைஞர்களைத் தடுமாற்ற மின்றி வாசிக்கப் பழக்குவதே முக்கிய நோக்கமாகும். ஆதலால் பொருள் விளங்காத அரும்பதங்களை முற்றிலும் விலக்கி, அவர்களது தினசரிப் பேச்சிலும் அநுபவத்திலும் விரவி வரும் சொற்களையும், விஷயங்களையுங் கொண்ட பாடங்களே, இப் புத்தகங்களில் அமைக்கப் பட்டுள்ளன. மேலும், மாணுக்கரது முயற்சியை ஊக்கிப் பேச்சுப் பழக்கத்தை விருத்தி செய்வதற்கான சம்பாஷணைகளும் கதைகளும் சேர்க்கப்பட்டிருத்தல் இப் புத்தகங்களுக்கு மற்றுமோர் சிறப்பாகும்.

பாலரது இயல்புகளுக்குரிய நவீன போதன முறைகளைக் குறிப்பிட்டும், பாடக்கிரமத்தை யமைத்தும் இப்

புத்தகங்களைத் தொகுப்பதில் பேருதவி புரிந்துள்ள எனது நண்பர் கோவிற்பட்டி ரேஞ்சு பாடசாலைகளின் ஸீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர், மறைத் திருவாளர், S. சிவராமகிருஷ்ணய்யர், B.A., L.T., அவர்கட்கு எனது மனமார்ந்த நன்றி செலுத்துங் கடப்பாடுடையேன். இப்புத்தகங்களிற் காணும் குழந்தைப் பாட்டுக்களைச் சேர்த்துக்கொள்ள அநுமதி தந்த திருவாளர் P. R. இராஜ சூடாமணி யவர்களுக்கும் பாரதி பிரசுராலயத்தார்க்கும் நன்றி உரியதாகுக.

இந்தப் பாலர் தமிழ் வாசகங்கள் எங்கும் பரவி இனிது நிலவும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவன் அருள் வானாக!

துரைத்தன மகம்மதியர் காலேஜ், சென்னை.

அ. கந்தசாமிப் பிள்ளை,
பதிப்பாசிரியர்.

பொருளடக்கம்

பாடம்	விஷயம்	பக்கம்
1.	பாப்பா...	7
2.	குழந்தை	8
3.	ஆனை, ஆனை!	9
4.	அம்புலி அழைத்தல்	10
5.	நிலா	11
6.	ஒரு சிறு பெண்	12
7.	கை வீசல்	13
8.	குடும்பம்	14
9.	கேள்வி—பதில்	15
10.	எனது உறுப்புக்கள்	16
11.	உண்மை பேசிய சுந்தரம்	18
12.	வீட்டு மிருகங்கள்	20
13.	பூனைக்குட்டிகளின் நிறம்	23
14.	நாயின் நல்லறிவு	24
15.	தொழிலாளிகள்	26
16.	காலைக் கடமைகள்	28
17.	பாடசாலையில் சேர்தல்	29
18.	உடலின் உறுப்புக்களும் வயிறும் ...	31
19.	விளையாடல்	32

பாடம்	விஷயம்		பக்கம்
20.	குழந்தைக் கதை	...	... 34
21.	சில பட்சிகள்	...	... 36
22.	கோழிப் பாட்டு	...	... 39
23.	நரியும் சேவலும்	...	... 40
24.	சூரியன்	...	... 42
25.	பொங்கல் பண்டிகை	...	... 44
26.	மாதப் பழமொழிகள்	...	... 45
27.	காட்டில் வசித்த கனகம்	...	... 46
28.	பட்டுக் குல்லா	...	... 49
29.	தன்னை மறந்த மூடர்கள்	...	... 53
30.	சொக்காயின் கதை	...	... 56
31.	ஆல மரம்	...	... 58
32.	குழந்தைப் பாட்டு	...	... 60
33.	பொன்னன்	...	... 61
34.	பழக்கடை	...	... 63
35.	இரண்டு பரதேசிகள்	...	... 66
	ஆத்தி சூடி	...	... 70
	உலக நீதி	...	... 71

பாலர் தமிழ் வாசகம்

இரண்டாம் புத்தகம்

1. பாப்பா

1. பார் ! இதோ ஒரு பாப்பா.
2. பாப்பாவின் அழகைப் பார் !
3. தொட்டிலில் படுத்து விளையாடுகிறது.
4. அம்மா தொட்டிலை ஆட்டுகிறாள்.
5. பசித்தால் பாப்பா அழும்.
6. அம்மா வந்து பால் கொடுப்பாள்.
7. பால் குடித்துப் பாப்பா சிரிக்கும்.

2. குழந்தை

1. இந்தக் குழந்தை என் தம்பி.
2. இவன் பெயர் சுந்தரம்.
3. சுந்தரம் நன்ருய்த் தவழுகிருன்.
4. அவன் கையில் இருப்பது லட்டு.
5. லட்டு மிட்டாயைப் பிட்டுத் தின்பான்.
6. சுந்தரம் நிற்கப் பார்க்கிருன்.
7. அவன் தத்தித் தத்தி நடக்கிருன்.
8. இரண்டு பல்லைக் காட்டிச் சிரிக்கிருன்.
9. சுந்தரம் தரையில் விளையாடுகிருன்.

3. ஆனை, ஆனை !

குழந்தை தாயார் மடியில் இருக்கிறது. அவள் அதை முன்னும் பின்னுமாக ஆட்டுகிருள். அப்பொழுது இந்தப் பாட்டைப் பாடுகிருள்.

ஆனை, ஆனை ! அரசர் ஆனை ;
அரசரும் அரசியும் ஏறும் ஆனை ;
கட்டிக் கரும்பை முறிக்கும் ஆனை ;
காவேரி நீரைக் கலக்கும் ஆனை ;
கலக்கிக் கலக்கி குடிக்கும் ஆனை ;
கடை வீதி எல்லாம் சுற்றும் ஆனை ;
குட்டி யானைக்குக் கொம்பு முளைத்தது ;
பட்டண மெல்லாம் பார்க்க வாருங்கள் !

சொல் பயிற்சி :

யானைக் கோம்பு=தந்தம்.

4. அம்புலி அழைத்தல்

1. அம்மா குழந்தையை வைத்திருக்கிறாள்.
2. குழந்தை அவள் இடுப்பில் இருக்கிறது.
3. அவள் அம்புலி காட்டுகிறாள்.
4. அம்புலி பார்க்க அழகாய் இருக்கிறது.
5. குழந்தை சந்திரனைப் பார்க்கிறது.
6. சந்திர வெளிச்சம் நிலா எனப்படும்.
7. குழந்தை அம்புலி மாமனை 'வா-வா' என்று அழைக்கிறது.
8. சந்திரனைப் பிடித்துத் தர அழுகிறது.
9. தாயார் கண்ணாடியைக் காட்டுகிறாள்.
10. கண்ணாடியில் சந்திரன் தெரிகிறது.
11. அதைப் பார்த்துக் குழந்தை சிரிக்கிறது.



5. நிலா

நிலா ! நிலா ! வா வா.
நில்லாமல் ஓடி வா.
மேலே மேலே ஏறி வா.
மல்லிகைப்பூக் கொண்டு வா.
நடு வீட்டில் வையே.
நல்ல துதி செய்யே.

தங்கக் கிண்ணம் பார்த்து,
தயிரும் சோறும் சேர்த்து,
அள்ளி அள்ளி எடுத்து,
அப்பனுக்கே கொடுத்து,
கொஞ்சிக் கொஞ்சி ஊட்டு ;
குழந்தைக்குச் சிரிப்புக்காட்டு.

6. ஒரு சிறு பெண்

இதோ ஒரு சிறு பெண். இவள் என் தங்கை. இவள் பெயர் கமலம். இவளுக்கு எப்போதும் விளையாட்டில் ஆசை.

இவள் மர ஆனை, மரப்பாய்ச்சி, ரப்பர்க் கிளி, ஊதல், பம்பரம், தகர ரயில் வண்டி, தகர மோட்டார், குடம், செம்பு இவைகளை வைத்துக் கொண்டு விளையாடுகிறாள்.

இவள் வீடு கட்டி விளையாடுவாள்.

இவள் ஊதலை ஊதுவாள் ; சத்தம் கேட்கும்.

வில்கம்பியைத் திருகி ரயிலையும் மோட்டாரையும் ஓடச்செய்வாள்.

ரப்பர்க் கிளியை அமுக்குவாள். அது "கீச்! கீச்!" என்று கத்தும்.

இவள் மரப்பாய்ச்சியைத் தன் குழந்தை என்று சொல்லுகிறாள். அதை மடியில் வைத்துத் தாலாட்டித் தூங்க வைக்கிறாள்.

7. கை வீசல்

கை வீசம்மா ! கை வீசு
கடைக்குப் போகலாம் கை வீசு
மிட்டாய் வாங்கலாம் கை வீசு
மெதுவாய்த்தின்னலாம் கைவீசு
பழங்கள் வாங்கலாம் கை வீசு
பரிந்து புசிக்கலாம் கை வீசு
சொக்காய் வாங்கலாம் கை வீசு
சொகுசாய்ப் போடலாம் கை வீசு
கோயிலுக்குப்போகலாம் கைவீசு
கும்பிட்டு வரலாம் கை வீசு.

8. குடும்பம்

இவள் என் தாயார்.
இவள் என்னைப் பெற்றவள்.
என் தாயார் என்னைப் பாலூட்டி வளர்த்தாள்.
நடக்கவும், பேசவும் என்னைப் பழக்கினவள் இவளே.

இவர் என் தந்தை.
இவர் என்னைக் காப்பாற்றுகிறார்.
எனக்கு உடையும் உடுப்பும் வாங்கித் தருகிறார்.
புத்தகம் கொடுத்து என்னைப் பாடசாலைக்கு அனுப்புகிறார்.

தாயும் தந்தையும் என் பெற்றோர்.
நான் இவர்களுக்கு மகன்.
நான் தாயினிடம் அன்பாக இருக்கிறேன்.
தந்தைக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறேன்.

சீதை என் அக்காள்.
அவள் என்னைத் தம்பி என்று அழைக்கிறாள்.
கமலம் என் தங்கை.
அவளுக்கு நான் அண்ணன்.
நாங்கள் சகோதரர்.

தாய், தந்தை, அண்ணன், அக்காள், தம்பி, தங்கை நாங்கள் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

நாங்கள் ஒருவருக்கொருவர் பிரியமாக இருந்து வருகிறோம்.

சொல் பயிற்சி :

1. அம்மா = அன்னை = தாயார் ; அப்பா = தகப்பனார் = தந்தை.
2. மகன்—மகள் ; தமையன்—தமக்கை ; பாட்டன்—பாட்டி ; பேரன்—பேர்த்தி.

---

9. கேள்வி—பதில்

ஒருவன் தன் கையைப் பின்புறமாக மறைத்துக்கொள்ள, மற்றவன் கேட்கிறான்.

கை எங்கே ?	காக்கா கொண்டு போச்சு.
காக்கா எங்கே ?	புளிய மரத்திலே.
புளிய மரம் எங்கே ?	வெட்டி விட்டேன்.
வெட்டின கட்டை எங்கே ?	அடுப்பு எரித்தேன்.
அடுப்பு எரித்த சாம்பல் எங்கே ?	பல் தேய்த்தேன்.
பல் தேய்த்த இடம் எங்கே ?	புல் முளைத்தது.
புல் எங்கே ?	குதிரை தின்றது.
குதிரை எங்கே ?	கோபுர வாசலிலே.

10. எனது உறுப்புக்கள்

இவை என் கண்கள்.

கண்களால் பார்க்கிறேன்.

கண் தெரியாதவன் குருடன்.



இவை என் காதுகள்.

காதுகளால் கேட்கிறேன்.

காது கேளாதவன் செவிடன்.

இவை என் கைகள்.

கைகளால் வேலை செய்கிறேன்.

கை இல்லாதவன் முடவன்.

இவை என் கால்கள்.

கால்களால் நடக்கிறேன்.

கால் இல்லாதவன் நொண்டி.

இது என் மூக்கு.

மூக்கினால் வாசனை அறிகிறேன்.

மூக்குக் குறைந்தவன் மூக்கறையன்.

இது என் வாய்.
வாயினால் சாப்பிடுகிறேன்.
வாயினால் பேசுகிறேன்.
பேச முடியாதவன் ஊமை.

எனக்குத் தலை ஒன்றே ; முகம் ஒன்றே.

என் வலது கையில் விரல்கள் ஐந்து.

இடது கையிலும் விரல்கள் ஐந்தே.

இரண்டு கால்களிலும் விரல்கள் பத்து.

விரல் நுனியில் நகம் உண்டு.

கை, கால் முதலியவை உறுப்புக்கள் எனப்படும். இந்த உறுப்புக்களை உடையது உடம்பு.

கேள்விகள் :

1. முகத்தில் உள்ள உறுப்புக்கள் எவை ?
2. வாசனையை அறியும் உறுப்பு எது ?
3. நீ எந்தக் கையினால் சாப்பிடுகிறாய் ?
4. இரண்டு கைகளிலும் உள்ள விரல்கள் எத்தனை ?
5. யாரை ஊமை என்போம் ?
6. காது கேளாதவனுக்கு என்ன பெயர் ?



11. உண்மை பேசிய சுந்தரம்

சுந்தரமும் மாணிக்கமும் தோட்டத்தில் விளையாடினார்கள். சுந்தரத்தின் கையில் ஒரு கத்தி இருந்தது. மாணிக்கம் "கத்தியால் என்ன செய்யலாம்?" என்று கேட்டான்.

"இதோ பார்!" என்று ஒரு ரோஜாச் செடியைச் சுந்தரம் வெட்டினான்.

படத்தில் பார்! சுந்தரம் கத்தியும் கையுமாக இருக்கிறான்.

மறுநாள், அவ்விருவரும் விளையாடத் தோட்டத்திற்கு வந்தார்கள். சுந்தரத்தின் தகப்பனாரும் அங்கு வந்தார். ரோஜாச் செடியைப் பார்த்தார். "யார் இதை வெட்டினது?" என்று கேட்டார். அவருக்குப் பயந்து மாணிக்கம் பேசாமலிருந்தான்.



இந்தப் படத்தைப் பார்! சுந்தரம் "அப்பா! நான்தான் தெரியாமல் வெட்டி விட்டேன்" என்கிருன். அவன் மன்னிக்க வேண்டுகிருன்.

சுந்தரம் உண்மையைச் சொன்னுன். தகப்பனுர் "இனிமேல் அப்படிச் செய்யாதே" என்ருர். அவன் உண்மை பேசியதற்குச் சந்தோஷப்பட்டார்.

கேள்விகள் :

1. சுந்தரம் செய்த குற்றம் என்ன ?
2. அது குற்ற மென்று இருவரும் எப்பொழுது உணர்ந்தார்கள் ?
3. தகப்பனுர் எதனுல் சுந்தரத்தின் மீது சந்தோஷப் பட்டார் ?

12. வீட்டு மிருகங்கள்

இது என் நாய். இது அறிவுள்ள பிராணி. இது வீடு காக்கும். நாய் எஜமானனிடத்தில் விசுவாசம் உள்ளது. நாய்க் குட்டி நம் கூட வரும்.

இது என் தங்கை கமலத்தின் பூனை. பூனை எலி பிடிக்கும். பூனைக்கு இரவிலும் கண் தெரியும். பூனைக் குட்டி ஓடி விளையாடும்.

இது எங்கள் வீட்டுப் பசு. பசு சாதுவான மிருகம். பசு பால் தரும். பால் இனிப்பாய் இருக்கும். கன்றுக்குட்டி துள்ளி ஓடும்.

இது ஓர் காளை மாடு. காளை மாட்டை எருது என்கிறோம். எருது வண்டியிழுக்கும். அது ஏர் உழ உதவும். எருது கொம்புகளால் முட்டும்.

இந்த எருமையைப் பார்! எருமை கறுப்பு நிறமானது. எருமை பால் தரும். பாலில் பிரை இட்டால் தயிராகும். தயிரைக் கடைந்தால் வெண்ணெயும், மோரும் கிடைக்கும். வெண்ணெயை உருக்கினால் நெய் ஆகும்.

ஆடு சாதுவான மிருகம். ஆடுகளில் வெள்ளாடு, செம்மறி ஆடு என இருவகையுண்டு. ஆடுகளின் குளம்பு பிளவு பட்டது. வெள்ளாட்டின் பால் பலம் தரும். ஆட்டுக் குட்டி துள்ளிக் குதிக்கும்.



குதிரை அழகான பிராணி. குதிரைக்குக் கொம்பு இல்லை. அதன் குளம்பு பிளவுபடாமல் வட்டமாக இருக்கும். குதிரைக்குக் கொள்ளும் புல்லும் தீனி. குதிரை வேகமாக ஓடும். அதன் மேல் ஏறிச் சவாரி செய்யலாம். அது வண்டி யிழுக்கும்.

பூனை, நாய், ஆடு, மாடு, குதிரை, கழுதை இவை நாலு கால் பிராணிகள். இவைகளை வீட்டில் வளர்க்கிறோம். இவை வீட்டு மிருகங்கள். இவை நமக்குப் பல விதங்களில் பாடு படுகின்றன. இவைகளிடம் பட்சமா யிரு.

சொல் பயிற்சி :

1. நாய் 'வள்-வள்' என்று குரைக்கும்.
பூனை சீறும்; 'மியா-மியா' என்று கத்தும்.
பசு 'அம்மா' என்று கதறும்.
ஆடு 'மே-மே' என்று கத்தும்.

2. குதிரை கனைக்கும்.
பன்றி உறுமும்.
குரங்கு கீச்சிடும்.
நரி ஊளையிடும்.

3. நாய்-நாய்க்குட்டி
பூனை-பூனைக்குட்டி
ஆடு-ஆட்டுக்குட்டி
மாடு—கன்று
அணில்-அணிற் பிள்ளை
எலி—எலிக்குஞ்சு.

கேள்விகள் :

1. கொம்பு இல்லாத மிருகங்கள் இரண்டு சொல் ?
2. எந்த மிருகங்கள் வண்டி யிழுக்க உதவும் ?
3. எந்த மிருகங்களிடத்திலிருந்து பால் கிடைக்கிறது ?
4. பாலில் இருந்து என்ன என்ன கிடைக்கும் ?
5. குதிரையின் தீனி என்ன ?

13. பூனைக் குட்டிகளின் நிறம்

வெள்ளை நிறத்தொரு பூனை—எங்கள்
வீட்டில் வளர்வது கண்டீர்!
பிள்ளைகள் பெற்றதந்தப் பூனை—இவை
பேருக் கொரு நிறமாகும்.

சாம்பல் நிறமொரு குட்டி—கருஞ்
சாந்து நிறமொரு குட்டி
பாம்பு நிறமொரு குட்டி—வெள்ளைப்
பாலின் நிறம் ஒரு குட்டி.

எந்த நிறம் இருந்தாலும்—அவை
யாவும் ஒரே தரம் அன்றோ?
இந்த நிறம் சிறிதென்றும்—இஃது
ஏற்ற மென்றுஞ் சொல்லலாமோ?

சொல் பயிற்சி :

பால் வெள்ளை நிறம்.
காகம் கறுப்பு நிறம்.
மிளகாய்ப் பழம் சிவப்பு நிறம்.
புல் பச்சை நிறம்.
எலுமிச்சம் பழம் மஞ்சள் நிறம்.

வெண்மை, கருமை, சிவப்பு, பச்சை, மஞ்சள் இவை பஞ்ச வர்ணங்கள்.

14. நாயின் நல்லறிவு

நாயின் காலைப் பிடித்திருக்கிறவர் யார்? ஏன் பிடித்திருக்கிறார்? அவர் வைத்தியர். அதன் காலுக்கு மருந்து போடுகிறார். நாயின் காலில் காயம் பட்டது. அது தினந்தோறும் வைத்தியரிடம் வருகிறது. வைத்தியரும் மருந்து போட்டு வருகிறார்.

இப்போது அநேகமாகக் காயம் ஆறி விட்டது. அந்த நாய் வைத்தியரிடம் மிகவும் நன்றி காட்டினது.

இன்று, அந்த நாய் மற்ருெரு நாயை அழைத்து வந்திருக்கிறது. வைத்தியர் "என்ன?" என்று கேட்கிருர். அது புதிய நாயின் காலே நக்கி இவரைப் பார்க்கிறது. "ஓஹோ! உன் தோழனுக்கும் மருந்து வேண்டுமா?" என்று கேட்கிருர்.

நாய் வாலே ஆட்டிக் கொண்டு குதிக்கிறது. வைத்தியர் புதிய நாய்க்கும் மருந்து போடுவார். அதற்கும் காயம் ஆறிவிடும்.

நாய் எவ்வளவு அறிவு உடையது பார்!

கேள்விகள்:

1. காயம்பட்ட நாய்க்கு வைத்தியர் என்ன செய்தார்?
2. முதல் நாய் இரண்டாவது நாயை எதற்காக அழைத்தது?
3. நாயின் அறிவு எப்படி விளங்குகிறது?

15. தொழிலாளிகள்

1. உயிரோடு இருக்க
உணவு வேண்டும்.
உணவுக்குத் தானியங்கள்
வேண்டும்.

தானியங்களைப் பயிர்
செய்பவன் குடியானவன்.



2. உடலை மூட உடை வேண்டும்.
துணிகள் நெய்பவன் சேணியன்.
துணிகள் தைப்பவன் தையற்காரன்.
துணிகளை வெளுப்பவன் வண்ணான்.

3. வசதியாக வசிக்க வீடு வேண்டும்.
சுவர்களைக் கட்டுகிறவன் கொற்றன்.
மரச் சாமான்கள் செய்பவன் தச்சன்.
இரும்பு வேலை செய்பவன் கருமான்.

4. உணவு சமைக்கப் பாண்டங்களும், பாத்தி ரங்களும் வேண்டும்.

மண் பாண்டங்கள் செய்பவன் குயவன்.

பாத்திரங்கள் செய்பவன் கன்னான்.

5. உடலை அழகு செய்ய நகைகள் வேண்டும். நகைகள் செய்பவன் தட்டான்.

6. அறிவை வளர்க்கக் கல்வி வேண்டும். கல்வி கற்பிப்பவர் உபாத்தியாயர்.

7. ஜனங்களைக் காப்பவர் அரசர்.

8. உலகத்தை உண்டாக்கியவர் கடவுள்.

கேள்விகள் :

1. வீடு கட்டத் தேவையான தொழிலாளிகள் யார்?
2. கன்னான் தொழில் என்ன?

16. காலைக் கடமைகள்

தாயார் : — சுந்தரம்! பொழுது விடிந்தது; படுக்கையை விட்டு எழுந்திரு.

சுந்தரம் : — எழுந்து விட்டேன், அம்மா! படுக்கையைச் சுருட்டி வைக்கிறேன்.

தாயார் :—பல் விளக்கி, முகம் கழுவிச் சீக்கிரம் வா.

சுந்தரம் :—பல் விளக்க என்ன இருக்கிறது?

தாயார் :—இதோ! ஆலம் விழுது இருக்கிறது.

சுந்தரம் :—பல் தேய்த்து வாய் கொப்பளித்து விட்டேன்.

தாயார் :—அதிகாலையில் குளிப்பது நல்லது. அழுக்குப் போக உடம்பைத் தேய்த்துக் குளி.

சுந்தரம் :—அப்படியே செய்கிறேன்.

தாயார் :—தலையையும் உடம்பையும் நன்றாகத் துடைத்துக்கொள். அரைக்குச் சுத்தமான ஆடையையும், மேலுக்கு நல்ல சொக்காயையும் தரித்துக்கொள். அப்பா இன்று உன்னைப் பள்ளிக்கூடத்தில் சேர்ப்பார்.

சுந்தரம் : — அம்மா! என் தலையை வாரி நெற்றிக்கு இடுங்கள்.

தாயார்:—சரி. இதோ காலை உணவு வைத்திருக்கிறேன்; சாப்பிட வா.

தகப்பனர்:—சுந்தரம்! சாப்பிட்ட பிறகு உன் புத்தகம், சிலேட், எழுதுகோல் இவைகளை எடுத்துக்கொள். பாடசாலைக்கு அழைத்துப் போகிறேன்.

---

17. பாடசாலையில் சேர்தல்

தகப்பனர்:—ஐயா! வந்தனம்.

உபாத்தியாயர்:—வாருங்கள். வந்த காரியம் என்ன?

தகப்பனர்:—பையனைப் பாடசாலையில் சேர்க்க வேண்டும்.

உபாத்தியாயர்:—இந்தப் பையனையா?

தகப்பனர்:—ஆம்.

உபாத்தியாயர்:—நல்லது, பையா! உன் பெயர் என்ன?

பையன்:—என் பெயர் சுந்தரம்.

உபாத்தியாயர்:—உன் வயது என்ன?

சுந்தரம்:—ஆறு, ஐயா!

உபாத்தியாயர்:—ஐயா! தங்கள் பெயரையும் ஊரையும் தயவு செய்து தெரிவியுங்கள்.

தகப்பனூர் :—என் பெயர் சம்பந்தம். எனது ஊர் குற்ருலம்.

உபாத்தியாயர் :—இதற்கு முன் சுந்தரம் வேறு பாடசாலையில் படித்திருக்கிருனு?

தகப்பனூர் :—இல்லை.

உபாத்தியாயர் :—நீங்கள் வீட்டில் ஏதாவது பாடம் சொல்லி வைத்திருக்கிறீர்களா?

தகப்பனூர் :—இவன் தாயாரும் நானுமாகக் கோகலே முதல் வாசகம் சொல்லிக் கொடுத்திருக்கிரும். அதை முடித்து விட்டான். சில கணக்குகளும் போடுவான்.

உபாத்தியாயர் :—நான் பரீட்சை செய்கிறேன்.

தகப்பனூர் :—பையன் எந்த வகுப்புக்குத் தகுதியாய் இருக்கிருன்?

உபாத்தியாயர் :—இரண்டாவது வகுப்புக்குத் தகுதியாய் இருக்கிருன்.

தகப்பனூர் :—அவனுக்கு வேண்டிய புத்தகங்கள் எவை?

உபாத்தியாயர் :—பாலர் தமிழ் இரண்டாம் வாசகம் மட்டும் இப்பொழுது வாங்கிக் கொடுங்கள். மற்றப் புத்தகங்களைப் பற்றிப் பிறகு சொல்லியனுப்புகிறேன். சுந்தரம்! அதோ இரண்டாம் வகுப்பு. அங்குப் போய் உட்கார்.

தகப்பனூர் :—வந்தனம் ஐயா! போய் வருகிறேன்.

18. உடலின் உறுப்புக்களும் வயிறும்

ஒரு காலத்தில் கால், கை, வாய் முதலிய உறுப்புக்கள் வயிற்றுக்கு விரோதமாகக் கலகஞ் செய்தன. அவைகள் பொருமை கொண்டு, "வயிறு சும்மா இருக்கிறது. நாம் வருந்தி வேலை செய்து அதற்கு உணவு கொடுக்கிறதா?" என்று குறை கூறின.

அதனால் கால்கள் வயிற்றைச் சுமந்து கொண்டு நடக்கமாட்டோம் என்றன. கைகள் உணவை வாய்க்குள் எடுத்துக் கொடுக்கமாட்டோம் என்றன. வாய் ஆகாரத்தை விழுங்க மாட்டேன் என்றது. உணவைப் பற்கள் மெல்ல மறுத்தன. தொண்டை உட்கொள்ள மறுத்தது. எந்த உறுப்புக்களுமே வேலை செய்யவில்லை.

ஆகையால் வயிற்றுக்கு ஆகாரம் கிடைக்கவில்லை. உடல் வர வர மெலிந்து போயிற்று. கால்களும் சோர்ந்தன. கைகளும் சோர்ந்தன. எல்லா உறுப்புக்களும் சோர்ந்து போயின. உயிர் போய் விடும் என்று தோன்றிற்று.

தாம் செய்தது தவறு என்று ஒவ்வொன்றும் உணர்ந்தன. இனி நாம் சேர்ந்து வாழ்வோம் என்று அவைகள் தம் தம் வேலைகளை முன்போலச் செய்யத் தொடங்கின. உடல் நல்ல சுகம் அடைந்தது.

19. விளையாடல்

சுந்தரம் :—கோபாலா! பாடங்கள் முடிந்தன. பள்ளிக்கூடம் விட்டனர். விளையாடலாம் வா.

கோபாலன் :—கோலி விளையாடுவோமா?

சுந்தரம் :—அதற்கு நான் வரவில்லை. கைகள் அழுக்காகும். நகக் கண்களில் மண் புகுந்து கொள்ளும்.

கோபாலன் :—அதோ! மாணிக்கம், மணி, முத்து, ராமு எல்லாரும் வருகிறார்கள். அவர்களையும் சேர்த்துக் கொள்வோம்.

சுந்தரம் :—நான் ஒரு புதிய பந்து வைத்திருக்கிறேன். அதைக் கால் பந்தாக அடிக்கலாம். எல்லாரும் வாருங்கள்.

மணி :—கால் பந்து விளையாட்டு இதோடு போதும். வேறு ஏதாவது விளையாடுவோம்.

முத்து :—நான் காற்றாடி வைத்திருக்கிறேன். அதைப் பறக்கவிடலாம் வா.

கோபாலன் :—இருட்டிவிட்டது. சிறிது நேரம் தட்டாமாலை சுற்றிவிட்டு வீட்டிற்குப் போவோம்.

முத்து:—எல்லாரும் அகல நில்லுங்கள். கைகளை விரித்துத் தட்டாமாலை சுற்றுவோம். இந்தப் பாட்டைப் பாடுவோம்.

தட்டாமாலை தாமரைப் பூ
சுற்றச் சுற்றச் சுண்ணும்பு
சுற்றிச் சுற்றி வருகிறது
சுழன்று சுழன்று வருகிறது
கிட்டிக் கிட்டி வருகிறது
எட்டி எட்டிப் போகிறது
சுற்றிச் சுற்றி வரும் பூமி
சுற்றி வரும் பூமியிலே
சுழன்று சுழன்று வருகின்றேன்
சுழன்று வரும் என்னுடனே
சூரிய சந்திரர் எல்லாரும்
வட்ட வளையம் போடுகிறார்.

20. குழந்தைக் கதை

இரவில் படுக்கும் நேரம். குழந்தைகள் பாட்டியைக் கதை சொல்ல வேண்டுகிறார்கள். பாட்டி காக்கைக் கதை சொல்லுகிறாள்.

கதை கதையாம், காரணமாம்,
காரணத்தில் ஓர் காக்கை நான்;
ஆற்றோரத்தில் ஓர் ஆலமரம்;
ஆலமரத்தில் கூடு கட்டினேன்.
கூடு கட்டி முட்டை யிட்டேன்.
குரங்கு வந்து முட்டையைத் திருடினது.
குரங்கைக் கடிக்கப் பாம்பிடம் சொன்னேன்.
பாம்பு புற்றுக் குள்ளே படுத்திருந்தது.
பாம்பை எழுப்பப் பாம்பாட்டியிடம் போனேன்.
பாம்பாட்டி காய்ச்சலாய்ப் படுத்திருந்தான்.
காய்ச்சலுக்கு மருந்து வாங்க வைத்தியரிடம் [போனேன்.
வைத்தியர் மருந்து பண்ணக் காசு கேட்டார்.
காசு வாங்க ராஜாத்தியிடம் போனேன்.

ராஜாத்தி ரோஜாப்பூ வேண்டுமென்றாள்.
ரோஜாப் பூப் பறித்து ராஜாத்திக்குக் கொடுத்தேன்.

ராஜாத்தி பை நிறையப் பணம் கொடுத்தாள்.

பணப் பையை நான் வைத்தியரிடம் கொடுத்தேன்.

வைத்தியர் காய்ச்சலுக்கு மருந்து தந்தார்.

மருந்தைக் கொண்டு பாம்பாட்டியிடம் கொடுத்தேன்.

பாம்பாட்டி குழலூதிப் பாம்பை எழுப்பினான்.

பாம்பு படமெடுத்துக் குரங்கைக் கடிக்க வந்தது.

குரங்கு முட்டையைக் கொண்டு வந்து என் கூட்டில் வைத்தது.

முட்டையைக் கூட்டில் வைத்து அடை காத்தேன்.

அடை காத்து அழகான குஞ்சு பொரித்தேன்.

குஞ்சு பொரிந்தது.

கதை முடிந்தது.

கத்தரிக்காய் காய்த்தது.

21. சில பட்சிகள்

இங்கு இரண்டு கோழிகளும், கோழிக் குஞ்சுகளும் இருக்கின்றன. தலையில் கொண்டையை உடையது ஆண் கோழி. இது சேவல் எனப்படும். தலையில் கொண்டை இல்லாதது பெட்டைக்கோழி. பெட்டைக்கோழிமுட்டையிடும். முட்டை பொரிந்து கோழிக் குஞ்சு வெளி வரும். கோழிகள் குப்பையைக் கிளறித் தானியம், புழு, பூச்சிகளைத் தின்னும். சேவல் விடியற் காலத்தில் கூவி, நம்மை எழுப்பும்.

இதோ காண்பது வாத்து. வாத்துத் தண்ணீரில் நீந்தும் ; தரையிலும் வசிக்கும். அதன் இறகுகளில் தண்ணீர் ஒட்டாது. அதன் விரல்களின் இடையில் மெல்லிய தோல் உண்டு. அதன் அலகு அகன்று தட்டையா யிருக்கும். அது நீரிலுள்ள பூச்சி, புழுக்களைத் தின்னும்.



அதோ! மரத்திலிருப்பது காகம். காகம் கறுப்பு நிறமான பறவை. அது அதிகாலையில் எழுந்து 'கா—கா' என்று கரையும். காகம் கண்டதைத் தின்னும்.

இந்தப் பச்சைக் கிளியைப் பார். கிளி அழகான பட்சி. கிளியைக் கூட்டில் வளர்க்கலாம். கிளியின் மூக்கு வளைந்து சிவப்பு நிறமாக இருக்கிறது. பச்சைக் கிளி பழங்களைத் தின்னும். அதற்குப் பாலும் சோறும் நல்ல உணவு. சொன்னதைச் சொல்லும் கிளிப் பிள்ளை.

இது ஒரு புரு. புருக்களை வீட்டில் வளர்க்கலாம். அவை அதிக உயரம் பறக்கும். பிறகு பழகிய இடத்திற்குத் திரும்பி வரும். இவைகள் தானியங்களைக் கொறிக்கும். புருவின் சிறகுகள் பல நிறங்களாக இருக்கும்.

இது ஒரு கருடன். கருடன் அதிக

உயரம் பறக்கும். அதன் உடல் சிவப்பு நிறம். அதன் கழுத்து வெண்மை நிறம். பருந்தும் கருடனைப் போன்றது. பருந்துக்குக் கழுத்தில் வெள்ளை இல்லை. பருந்து மாமிசம் புசிக்கும்.

சொல் பயிற்சி :

1. கோழி கூவும்.
   புறு கூவும்.
   குயில் கூவும்.
   வாத்து 'குவாக்-குவாக்' என்று கத்தும்.
   காகம் 'கா-கா' என்று கரையும்.
   கிளி கொஞ்சும் ; சொன்னதைச் சொல்லும்.
   ஆந்தை அலறும்.
   தேனீ பாடும்.
2. கிளி—கிளிப் பிள்ளை.
   கோழி—கோழிக் குஞ்சு.

22. கோழிப் பாட்டு

சேவற் கோழி :—

காலைக் கதிரோன் உதித்தனன்
கதிர்கள் எங்கும் விரித்தனன்
வேலை செய்ய ஓடி வா
வேண்டும் இரையைத் தேட வா.

பெட்டைக் கோழி :—

கோழி ! கோழி ! ஓடி வா
கொண்டைப் பூவைக் காட்டி வா
ஆவலாகச் சோலையில்
ஆடி மகிழ ஓடி வா.

சேவற் கோழி :—

கோழி ! கோழி ! ஓடி வா
கூட்டில் முட்டை யிட்டு வா
கூவி இட்ட முட்டையைக்
கூட்டில் அடை காக்க வா.
பெட்டைக் கோழி ! குஞ்சுகள்
பேண இங்கே ஓடி வா
குட்டிப் புழுவும் நெல்லும்
கொத்திக் கொத்தித் தின்ன வா.
வட்ட மிட்டு வந்திடும்
வஞ்சப் பருந்து வானிலே
திட்டமாகக் குஞ்செல்லாம்
திரட்டிக் கூட்டில் சேர்க்க வா.

23. நரியும் சேவலும்

ஒரு நாள் நரி ஒன்று பசியால் அலைந்தது. அது ஒரு சேவலைச் சந்தித்தது. சேவலைப் பார்த்து "சேவலாரே! உமது குரல் இனிமை யானது என்கிறார்கள். ஆனால், உமது தந்தை யைப் போல அவ்வளவு நன்றாய்ப் பாடுவீரா? அப்படியானால் சிறிது பாடிக் காட்டும்" என்று தந்திரமாகச் சொன்னது.

சேவல் உடனே கர்வத்துடன் கண்ணை மூடிக் கொண்டு 'கொக்கறக் கோ-கோ' என்று கூவ ஆரம்பித்தது. அது கண்ணை மூடிக் கொண்டதும் நரி அதைக் கௌவிக் கொண்டு ஓட்டம் பிடித்தது. தூரத்தில் இருந்த சிலர், நரி சேவலைத் தூக்கி ஓடுவதைப் பார்த்தார்கள். "ஐயோ! நம்முடைய சேவலை, நரி தூக்கிக்

கொண்டு போகிறதே'' என்று அவர்கள் கத்தினார்கள்.

இதைக்கேட்ட சேவல் "நரியாரே! அவர்கள் என்ன சொல்லுகிறார்கள், தெரியுமா? அவர்களது கோழியை நீர் தூக்கிக் கொண்டு ஓடுகிறீராம். நான் உம்முடைய கோழிதான்; அவர்களுடையது அல்ல என்று அவர்களுக்குச் சொல்லும்'' என்று சொன்னது.

நரி சிறிதும் யோசிக்காமல், "இந்தக் கோழி என்னுடையது தான்; உங்களுடையது அல்ல'' என்று வாயைத் திறந்து ஊளையிட்டது. நரி வாயைத் திறந்ததும் சேவல் அதன் வாயிலிருந்து தப்பித்துக் கொண்டு பறந்து போய் ஒரு மரத்தில் உட்கார்ந்து கொண்டது.

நரி ஏமாறி ஒன்றும் செய்ய முடியாமல் விழித்தது. மரத்திலேறிய கோழி, "நரியாரே! நீர் சொன்னது உண்மையில்லை. நான் உம்முடையது அல்ல. இனியாவது ஜாக்கிரதையாய் இரும்; போய் வாரும்'' என்று பரிகாசம் செய்தது.

கேள்விகள்:

1. நரி சேவலைப் பார்த்து என்ன சொன்னது?
2. சேவல் கண்ணை மூடிக்கொண்டு பாடினதும் நரி என்ன செய்தது?
3. நரியைப் பார்த்த சிலர் என்ன சொன்னார்கள்?
4. நரி என்ன சொல்லி ஊளையிட்டது?
5. கோழி கடைசியில் என்ன சொன்னது?



24. சூரியன்

சூரியன் உதிப்பதைப் பார்! அது சிவந்த பந்து போல் அழகாய்க் காண்கிறது. சூரியன் தோன்றி மேலே கிளம்பி வரும் வேளையே காலை. பிறகு சூரியன் வானத்தின் உச்சியில் வருகிறது. அந்த வேளையே மத்தியானம். அப்போது அது மிகப் பிரகாசமாய் இருக்கும். பிறகு சூரியன் மறையும் வேளை மாலை. அப்போது தங்க மய மான ஒரு உருண்டையாக அது தோன்றுகிற தல்லவா?

சூரியன் மறைந்ததும் எங்கும் இருட் டாகிறது. சூரியன் தெரியும் வெளிச்சமான காலம் பகல். சூரியன் மறைந்து இருட்டாக உள்ள காலம் இரவு. ஒரு பகலும் ஒரு இர வும் சேர்ந்தது ஒரு நாள் அல்லது தினம்.

சூரியன் காலம் தவருமல் ஒவ்வொரு நாளும் தோன்றி மறைவது என்ன ஆச்சரியம்!

நாம் காலேச் சூரியனேப் பார்த்து நின்ருல் நமது முன்புறம் கிழக்கு; முதுகுப்புறம் மேற்கு; வலது கைப்புறம் தெற்கு; இடது கைப்புறம் வடக்கு. சூரியன் தினமும் கிழக்கில் உதித்து மேற்கில் மறைகிறது.

சொல் பயிற்சி :

ஞாயிறு

திங்கள்	வியாழன்
செவ்வாய்	வெள்ளி
புதன்	சனி

இந்த எழு நாட்கள் சேர்ந்தது ஒரு வாரம். முப்பது நாட்கள் ஒரு மாதம்.

தமிழ் மாதங்கள் :

சித்திரை	ஆவணி	மார்கழி
வைகாசி	புரட்டாசி	தை
ஆனி	ஐப்பசி	மாசி
ஆடி	கார்த்திகை	பங்குனி

இங்கிலீஷ் மாதங்கள் :

ஜனவரி	மே	செப்டம்பர்
பிப்ரவரி	ஜூன்	அக்டோபர்
மார்ச்சு	ஜூலை	நவம்பர்
ஏப்ரல்	ஆகஸ்டு	டிசம்பர்

பன்னிரண்டு மாதங்கள் ஒரு வருஷம்.



25. பொங்கல் பண்டிகை

நமது நாட்டில் பொங்கல் பண்டிகை ஒரு பெரிய பண்டிகை. பொங்கல் பண்டிகையைச் சங்கிராந்தி என்றும் சொல்லுவார்கள்! அது ஒவ்வொரு வருஷமும் தை மாதம் முதல் தேதியில் வரும். அப்பொழுது இந்துக்கள் வீடுகளைச் சுத்தம் செய்வார்கள் ; சுவர்களுக்கு வெள்ளையடிப்பார்கள். தரையை மெழுகிக் கோலம் போட்டு அலங்காரம் செய்வார்கள். புதிய பாண்டங்களை வாங்குவார்கள். புதிய தானியங்களைச் சமைப்பார்கள். இவைகள் நல்ல சுகாதார ஏற்பாடுகள் அல்லவா ?

பொங்கல் பண்டிகை தினம் சூரியனைப் பூஜை செய்வது வழக்கம். அந்தப் பூஜையில் கரும்பு, தேங்காய், வாழைப் பழம், மஞ்சள் கொத்து, சர்க்கரைப் பொங்கல் முதலியன

படைப்பார்கள். பொங்கலுக்கு முந்திய நாள் போகிப் பண்டிகை; மறுநாள் மாட்டுப் பொங்கல். மாட்டுப் பொங்கல் அன்று பசு மாட்டைப் பூஜை செய்வார்கள். அன்று சாயங் காலம் மாடுகளை அலங்கரித்து ஓட விடுவார்கள்.

---

26. மாதப் பழமொழிகள்

சித்திரை மாதப் புழுதி பத்தரை மாற்றுத் தங்கம்.

வைகாசி மழை வாழை பெருகும்.

ஆனி அரையாறு; ஆவணி முழு ஆறு.

ஆடிப் பட்டம் தேடி விதை.

ஆவணி இலை அசைய, காவிரி கரை புரள.

புரட்டாசியில் பொன்னுருகக் காயும்; மண் ணுருகப் பெய்யும்.

ஐப்பசி அடை மழை; கார்த்திகை கன மழை.

கார்த்திகைக்குப் பின் மழையில்லை; கர்ணனுக் குப் பின் கொடையில்லை.

மார்கழிப் பனி மாசூல் பெருகும்.

தைப் பனி தரையைத் தொளைக்கும்.

மாசி மழை மா பூக்கும்.

பங்குனி மழை பதம் கெடுக்கும்.

27. காட்டில் வசித்த கனகம்

பல வருஷங்களுக்கு முன் காட்டில் ஒரு குடிசை இருந்தது. அந்தக் குடிசையில் ஒரு தாயும் ஒரு சிறு பெண்ணும் இருந்தார்கள். இவர்கள் எளியவர்கள். அந்தச் சிறு பெண்ணின் பெயர் கனகம்.

ஒரு நாள் வீட்டில் உணவு இல்லை. அரிசி வாங்கி வரத் தாயார் சந்தைக்குப் போயிருந்

தாள். கனகத்துக்கு அதிகப் பசியாக இருந்தது. தாயாரைத் தேடிக்கொண்டு காட்டிற்குள் சென்ருள். அங்கே வழிதெரியாமல் அலைந்து களைத்து ஒரு மரத்தடியில் அவள் உட்கார்ந்தாள். ஐயோ, பாவம்! பசியினுல் அழுதாள்.

அந்தக் காட்டிலுள்ள தேவதை அந்தப் பெண்முன் தோன்றினுள். "குழந்தாய்! ஏன் அழுகிருய்?" என்று அவள் கேட்டாள். "வீட்டில் சாப்பிடுவதற்கு ஒன்றுமில்லை. அம்மா சந்தைக்குப் போயிருக்கிருள். நான் பசியினுல் அழுகிறேன்" என்று கனகம் சொன்னுள். அந்த வன தேவதை, "பெண்ணே! அழாதே. இதோ ஒரு சட்டி யிருக்கிறது. இதை வீட்டுக்குக் கொண்டு போய் அடுப்பில் வைத்து, 'சோறே! சோறே! பொங்கி வா!' என்று சொல். அப்பொழுது வேண்டிய சோறு பொங்கிவரும். பிறகு 'சோறே! சோறே! போதும் போ!' என்று சொல். அப்போது அது நின்று விடும்" என்று சொல்லி அந்தச் சட்டியை அவளிடம் கொடுத்தாள்.

கனகம் வீட்டுக்குத் திரும்பி வந்தாள். சட்டியை அடுப்பில் வைத்து "சோறே! சோறே! பொங்கி வா!" என்ருள். உடனே சோறு சட்டியிலிருந்து பொங்கி வந்தது. அது மேலும் மேலும் ஏராளமாக வந்துகொண்டே யிருந்தது. அந்தப் பெண் திகைத்து நின்ருள்.

"சோறே! சோறே! போதும் போ!" என்று சொல்ல அவள் மறந்து விட்டாள். சோறு பொங்கி வழிந்து வீடெல்லாம் நிறைந்தது. பிறகு வீட்டிற்கு வெளியேயும் வழிந்து போய்த் தெருவெல்லாம் சாதமாயிற்று. அந்த வேடிக்கையைப் பார்க்க எல்லோரும் வந்து கூடினார்கள். அப்பொழுது அவள் தாயும் வந்து சேர்ந்தாள். அவள் ஆச்சரியப்பட்டு, நடந்ததைத் தன் மகளிடம் கேட்டாள்.

அந்தப் பெண், தேவதை கூறியதை மொழிந்தாள். உடனே சோற்றை நிறுத்த அத் தேவதை சொன்ன சொற்கள் ஞாபகத்திற்கு வந்தன. "சோறே! சோறே! போதும் போ!" என்றாள். சோறு பொங்கி வருவது நின்றது. அங்கு வந்தவர்கள் எல்லோரும் அந்தச் சோற்றை உண்டு மகிழ்ந்தார்கள்.

கேள்விகள் :

1. கனகம் எங்கே வசித்தாள் ?
2. கனகத்தின் தாயார் சந்தைக்கு ஏன் போனாள் ?
3. காட்டில் கனகம் ஏன் அழுதாள் ?
4. தேவதை அவளுக்கு என்ன கொடுத்தது ?
5. சோறு பொங்கி வழிந்த பொழுது அதை நிறுத்தக் கனகம் என்ன சொல்லியிருக்க வேண்டும் ?
6. சோற்றை நிறுத்த தேவதை சொன்ன சொற்கள் எப்பொழுது ஞாபகத்திற்கு வந்தன ?

28. பட்டுக் குல்லா

ஓர் ஊராம்; அந்த ஊரின் பெயர் தஞ்சாவூராம். அந்த ஊருக்கு ஒரு ராஜா. அந்த ராஜாவின் பெயர் தங்க ராஜா.



அந்தத் தஞ்சாவூரிலே ஒரு பெரிய கோயில் உண்டு. அந்தக் கோயிலுக்கு முன் பக்கத்திலே ஒரு பெரிய கோபுரம் உண்டு. அந்தக் கோபுரத்திலே ஒரு கிளி குடியிருந்து வந்தது.

ஒரு நாள் தங்க ராஜா ஒரு தங்கப் பல்லக்கில் ஏறிக் கொண்டு இங்கே உலாவ வந்தார்.

பச்சைக் கிளி ராஜா வருவதைப் பார்த்து :—

தஞ்சாவூர் ராஜாவே, என்
தங்கமான ராஜாவே!
தரையிலிருந்து எனக்கு ஓர்
தங்கக் காசு கிடைத்ததே!
தரையிலிருந்து எனக்கு ஓர்
தங்கக் காசு கிடைத்ததே!
தஞ்சாவூர் ராஜாவே, என்
தங்கமான ராஜாவே!

(என்று சொல்லிக் கூத்தாடுகிறது)

கிளி கூத்தாடுவதையும் அது தன்னைக் கூப்பிடுவதையும் ராஜா கவனிக்கிறார்.

பச்சைக் கிளி :—பல்லக்கில் ஏறி வரும் துரையே !

தரையிலிருந்து எனக்கு ஓர் தங்கக் காசு கிடைத்ததே !

(ஆடுகிறது)

ராஜா :—பல்லக்கை நிறுத்துங்கள்.

(சேவகனைப் பார்த்து) :—சேவகா ! அந்தக் கிளியைப் பார்த்தாயா ? அதற்கு எவ்வளவு பெருமை ! அது தனக்கு ஒரு தங்கக் காசு கிடைத்ததென்று எப்படிக் கூத்தாடுகிறது ! அதற்கு நான் மகாராஜா என்று கொஞ்சங் கூடப் பயமில்லையே. அடே சேவகா ! நீ போய் அந்தக் கிளியின் காசைப் பிடுங்கிக் கொண்டு வா.

சேவகன் உடனே போய்க் கிளியினிடம் இருந்த காசைப் பிடுங்கி வந்து ராஜா விடம் கொடுக்கிறான்.

பச்சைக் கிளி :—

தஞ்சாவூர் ராஜாவே ! என்
தங்கக் காசை வாங்கிக் கொண்டீரே !
தங்கமான ராஜாவே ! என்
தங்கக் காசை வாங்கிக் கொண்டீரே !

ராஜா (அதைக் கேட்டுக் கோபப்பட்டு) :—அடே சேவகா ! அந்தக் கிளி என்னையும் கேலி பண்ணுகிறதே ; பார்த்தாயா? நீ போய் அந்தக் கிளியின் தலையிலே ஒரு குட்டு, குட்டி விட்டு வா.

சேவகன் அந்தக் கிளியைப் பிடித்து அதன் தலையில் ஒரு குட்டுக் குட்டுகிறான். கிளியின் தலையில் இருந்து இரத்தம் வழிகிறது. அந்த இரத்தம் பட்டுக் குல்லா வைத்தது போல் தோன்றுகிறது.

கிளி :—

எங்கள் ராஜா தங்க ராஜா ;
என் காசை வாங்கிக்கொண்ட
எங்கள் துரை மகாராஜா !
என் தனக்குச் சிவப்பான,
பட்டுக் குல்லா தைத்தாரே !
பட்டுக் குல்லா தைத்தாரே !
(குதித்துக் குதித்துப் பாடுகிறது)

ராஜா :—ஆஹா ! அந்தக் கிளி எவ்வளவு நல்ல கிளி. அது தனக்கு ஒரு தங்கக் காசு கிடைத்தபோதும் சந்தோஷமாக இருந்தது. சேவகன் அதன் தலையில் குட்டி இரத்தம் வருகிற போதும் சந்தோஷமாக இருக்கிறதே! சுகம் வந்தாலும் துக்கம் வந்தாலும் அது எப்போதும் சந்தோஷமாக இருக்கிறது. நானும் இனிமேல் அந்தக் கிளியைப்போல் இருப்பேன். அடே சேவகா ! அந்தக் கிளியைப் பிடித்துக்கொண்டு வா.

சேவகன் கிளியைப்பிடித்துக் கொண்டு வந்து ராஜாவிடம் கொடுக்கிறான். ராஜா கிளியை மடிமேல் வைத்துக் கொண்டு அரண்மனைக்குப் போகிறார்.

வைத்தியனைக் கூப்பிட்டுத் தலைக்கு மருந்து போடச்சொல்லுகிறார். கிளியைக் கூட்டில் அடைத்துப் பாலும் பழமும் கொடுத்து வளர்க்கிறார்.

தலையில் உள்ள புண் ஆறினதும் கிளி அந்தக் கூட்டைவிட்டுத் திரும்பவும் கோபுரத்திற்குப் பறந்து போய்விடுகிறது.

கிளி (ராஜா உலாவ வருகிறதைப் பார்த்து) :—

தஞ்சாவூர் ராஜாவே ! என்
தங்கமான ராஜாவே !
பழமும் பாலும் தந்த ராஜாவே !
தந்தை போல வளர்த்த ராஜாவே !
தஞ்சாவூர் ராஜாவே என் !
தங்கமான ராஜாவே !
(குதித்துக் குதித்துக் கூத்தாடுகிறது)



29. தன்னை மறந்த மூடர்கள்

பத்து மனிதர்கள் சேர்ந்து ஒரு தினம் மீன் பிடிக்கச் சென்றார்கள். அவர்கள் கல்வி அறிவு இல்லாதவர்கள். கபடு, சூது அறியாத எளியவர்கள். நடு ஆற்றில் இறங்கிப் பல இடங்களில் சென்று மீன் பிடித்தார்கள். அன்று நதியில் வெள்ளம் அதிகம். மீன் பிடித்த பிறகு எல்லோரும் கரையேறி வந்தார்கள். பிடித்த மீன்களை அருகிலிருந்த ஓர் வியாபாரியிடம் விற்றார்கள். விலைப் பணத்தை வாங்கிக் கொண்டு வீடு திரும்பினார்கள்.

வரும் வழியில் அவர்களில் ஒருவன் "இன்று ஆற்றில் வெள்ளமும், வேகமும் அதிகம். எல்லோரும் கரையேறி விட்டோமா? எண்ணிப் பார்ப்போம்" என்றான். ஒவ்வொருவரும் தன்னை விட்டு விட்டுப் பிறர்களை மட்டும்

எண்ணி ஒன்பது பேர்கள்தான் இருப்பதாக அறிந்தார்கள். உண்மையில் ஒருவனை ஆறு அடித்துக் கொண்டு போய் விட்டதாகவே நினைத்தார்கள். அதனால் துக்கத்துடன் அழத் தொடங்கினார்கள்.

அவ்வழியாக ஓர் வழிப்போக்கன் வந்து கொண்டிருந்தான். அவர்கள் அழுவதைக் கண்டு காரணத்தை விசாரித்தான். "நாங்கள் பத்துப் பேர்கள் நடு ஆற்றில் மீன் பிடிக்கச் சென்றோம். கரையேறி வந்து எண்ணினதும் ஒன்பது பேர்கள்தான் இருக்கிறோம். ஒருவன் தண்ணீரில் மூழ்கிப்போய் விட்டான்" என்று சொல்லி, ஒரு மனிதன் தன்னை எண்ணாமல் மற்றவரைமட்டும் எண்ணிக்காட்டினான். வழிப் போக்கன் இவர்களது அறிவீனத்தை உணர்ந் தான். "நான் அந்தப் பத்தாவது மனிதனை வரவழைத்துத் தருகிறேன். எனக்கு என்ன தருவீர்கள்?" என்று கேட்டான். "நாங்கள் இன்று மீன் பிடித்து விற்ற பணத்தை மடியில் வைத்திருக்கிறோம். அத்தனையையும் கொடுக்கச் சம்மதிக்கிறோம். எப்படியாவது எங்கள் தோழன் அகப்பட்டால் போதும்" என்று சொன்னார்கள்.

வழிப்போக்கன் பணம் முழுவதையும் வாங் கிக்கொண்டு அவர்களை வரிசையாக நிறுத்தி

னுன். ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து என்று ஒவ்வொருவரையும் சுட்டிக் காட்டி, ஆகப் பத்து மனிதர்கள் இருப்பதை எண்ணிக் காட்டினுன். அவர்கள் மிக்க சந்தோஷம் அடைந்தார்கள்.

கடவுள்தான் இவ்வழிப்போக்கன் மூலமாக ஆற்றில் போன தோழனை வருவித்துக் கொடுத்தாரென்று நம்பினுர்கள். கடவுளையும் வழிப்போக்கனையும் வாழ்த்தி வீடு சென்றனர்.

கேள்விகள் :

1. பத்துப்பேரும் எங்கே மீன்பிடிக்கப் போனுர்கள் ?
2. திரும்பி வரும் வழியில் அவர்களில் ஒருவன் என்ன சொன்னுன் ?
3. எண்ணுவதில் அவர்கள் செய்த தவறு யாது ?
4. வழிப்போக்கனிடம் அவர்களில் ஒருவன் என்ன சொன்னுன் ?
5. அவன் காணுமற் போனவனை எப்படி வரவழைத்துக் கொடுத்தான் ?
6. மீன் பிடித்தவர்கள் ஏன் கடவுளை வாழ்த்தினுர்கள் ?

30. சொக்காயின் கதை

என் பெயர் பருத்திப் பஞ்சு. என் தாயின் பெயர் பருத்திச் செடி. அவள் பெரியவள் ஆனதும் பொன் நிறமான பூப் பூத்து, பச்சை நிறமான காய் காய்த்தாள். காய் முற்றி வெடித்து நான் பிறந்தேன்.

என் தாயைப் பயிர் செய்தவர்கள் என்னைப் பறித்தார்கள். அவர்கள் இயந்திரங்களால் கொட்டைகளை நீக்கினார்கள். நான் சுத்தமான பஞ்சு ஆனேன். பிறகு ஒரு பெண் பிள்ளை ராட்டையினால் நூலாக நூற்றாள்.

பின்பு ஒரு சேணியன் என்னைப் பலவிதமான சாயத் தண்ணீரில் தோய்த்தான். அப்பொழுது என் வெண்ணிறம் மறைந்து போயிற்று. பிறகு அவன் என்னைப் பாவிலே கோத்தான். அவன் என்னைத் தறியிலே சேர்த்துத் துணியாக நெய்தான். அப்பொழுது நான் மிகவும் அழகிய துணியாக மாறினேன்.

ஒரு நாள் பெரியவர் ஒருவர் வந்தார். அவர் விலை கொடுத்து என்னை வாங்கினார். வாங்கின பிறகு அவர் என்னை ஒரு தையற்காரனிடம் கொடுத்தார். அவன் என்னைக் கத்தரிக் கோலால் வெட்டித் தையல் இயந்திரத்தினால் தைத்தான். அப்பொழுது நான் அழகிய சொக்காயாக மாறி விட்டேன்.

இப்பொழுது என்னைக் கமலம் என்பவள் அணிந்து வருகிறாள். நான் எப்பொழுதும் கமலத்தின் சொக்கா யாக இருக்க விரும்புகிறேன். ஏனென்றால் அவள் என்னைப் பத்திரமாகக் காப்பாற்றி வருகிறாள். அவள் என்னை அணிந்துகொண்டு பள்ளிக்கூடம் போகிறாள்.

விடுகதை

கை உண்டு, விரல் இல்லை ;
கழுத்து உண்டு, தலை இல்லை;
பை உண்டு, பணம் இல்லை ;
மார்பு உண்டு, மூச்சு இல்லை ;
நான் யார் ?

31. ஆல மரம்

நமது நாட்டிலுள்ள பல வகை மரங்களில் ஆல மரம் மிகப் பெரியது. ஆல மரத்தைப் பல இடங்களில் பார்த்திருப்பீர்கள். இதைச் சாலையோரங்களில் வைத்துச் சாதாரணமாய் வளர்க்கிறார்கள். அது பருத்துப் பல கிளைகள் விட்டுத் தழைத்து, ஒரு பெரிய பந்தல் போலக் காண்கிறது.

ஆல மரம் பூமிக்குள் ஓடும் பெரிய வேர்களை விடுவதுடன், தனது கிளைகளிலிருந்து பல தொங்கும் வேர்களையும் விடும். இந்தத் தொங்கும் வேர்களுக்கு விழுதுகள் என்று பெயர். இந்த விழுதுகள் கிளைகளிலிருந்து சிறு கயிறுகளைப்போல் முதலில் தொங்கும். பிறகு, பருத்துப் பூமிக்குள் சென்று தூண்கள்போலக் கிளைகளைத் தாங்கும். மெல்லிய விழுதுக் குச்சிகள் பல் தேய்க்க உதவும்.

"ஆலும் வேலும் பல்லுக் குறுதி"

ஆல இலைகள் அகன்று பசுமையாக இருக்கின்றன. ஆதலால் ஆல மரத்து நிழல் மிகக் குளிர்ச்சி யுள்ளது. வெயிலில் நடந்து போகும் மனிதர்கள் அதன் நிழலில் தங்கிக் களைப்பாறுவார்கள். ஆடு மாடுகளும் அங்கே படுத்துச் சுகமாக இளைப்பாறும். ஆலிலைகளைத் தைத்து உண்கல னாகப் பலர் உபயோகிக்கிறார்கள்.

ஆலம் பழம் சிறுத்து உருண்டையாகக் கோலிக் குண்டைப்போல் இருக்கும். அது சிவப்பு நிறமுள்ளது. ஆலம் பழத்தினுள் கடுகைக் காட்டிலும் சிறிய விதைகள் உண்டு. இந்தச் சிறிய விதை முளைத்துப் பெரிய மரமாவது ஆச்சரிய மல்லவா? கிளி, காகம் முதலிய பலவகைப் பட்சிகள் ஆலங் கிளைகளில் தங்கி வசிக்கும். அதன் பழங்களை அவை தின்னும்.

ஆல் போல் தழைத்து, அறுகு போல் வேர் விட்டு வாழ்வீராக!

சொல் பயிற்சி :

1. மா மரம்
   ரோஜாச் செடி
   அவரைக் கொடி
   அறுகம் புல்
2. வாழை மரம்—வாழைக் கன்று.
   தென்னை மரம்—தென்னம் பிள்ளை.

32. குழந்தைப் பாட்டு

ஆற்றங் கரை யோரத்திலே
அழகான ஆல மரம்,
காற் றடித்துப் பந்த லிட்டுக்
களிப்பான இடந் தருமே!

பச்சையிலைப் பந்தலைப் போல்
படர்ந்த நல்ல ஆல மரம்,
பட்டப் பகல் படுத்திருக்கப்
பரந்த நல்ல நிழல் தருமே!

மாலையில் பிள்ளைகளும்,
வேலையால் களைத்தவரும்,
சாலையில் நடந்தவரும்
தங்க நல்ல இடந் தருமே!

33. பொன்னன்

பொன்னன் ஒரு குடியானவன் மகன். அவன் தகப்பனுர் நல்லவர். ஒரு நாள் அவர் பொன்னனைப் பார்த்து "உழவு எருதுகளை மேய்த்து வா" என்று ஏவினுர். அவன் அவைகளைப் புல் நிறைந்த மந்தை வெளியில் மேய விட்டான். அங்கு ஒரு மா மரம் இருந்தது. அது வேருெருவருக்குச் சொந்தமானது. அதில் காய்களும் பழங்களும் தொங்கிக்கொண்டிருந்தன.

பொன்னன் அந்த மரத்தின் மேலேறிச் சில பழங்களைப் பறித்துத் தின்றுகொண்டிருந்தான்; மாடுகளைக் கவனிக்கவில்லை. மாடுகள் பக்கத்து வயலில் சென்று பயிர்களைத் தின்றன. அதைப்

பார்த்த பொன்னன் மரத்தை விட்டு இறங்கி ஒரு பெரிய கோலால் மாடுகளை அடித்தான். அவை அந்த அடியைத் தாங்க முடியாமல் அங்கு மிங்கும் ஓடின.

அப்போது அங்கே வந்த தகப்பனார் இவற்றை எல்லாம் பார்த்தார். பிறகு தன் மகனைப் பார்த்து "பொன்னா! அந்த அடி உனக்கே தகும். மாடுகள் அறிவில்லாதவைகள். அவைகள் பிறர் வயலில் செல்வது இயற்கை. ஆனால் அறிவுள்ள நீ பிறர் மரத்தில் ஏறிப் பழங்களைத் தின்றது தவறு. மேலும், நீ மாடுகளைக் கவனியாததால் தான் அவைகள் பயிரை மேய்ந்தன. அதற்காக நீ அவற்றை அடித்ததும் தவறு" என்று அவர் சொன்னார். பொன்னனுக்குப் புத்தி வந்தது. அவன் ஒரு நல்ல நீதி கற்றுக் கொண்டான். அது முதல் அவன் பிறர் பொருளுக்கு ஆசைப்பட்டு அதை எடுப்பதில்லை. பிராணிகளை அடிப்பதை விட்டு அவைகளைப் பிரியமாய் நடத்தவும் முயன்றான்.

கேள்விகள் :

1. பொன்னன் யார் மகன்?
2. அவன் மாடு மேய்க்கும் பொழுது என்ன செய்தான்?
3. மாடுகள் என்ன செய்தன?
4. அவன் மாடுகளை என்ன செய்தான்?
5. இவற்றைப் பார்த்த தகப்பனார் என்ன சொன்னார்?
6. அவன் கற்றுக் கொண்ட நீதி யாது?

34. பழக் கடை

பிள்ளைகளே! இந்தப் பழக் கடையைப் பாருங்கள். பழக் கடையில் பலவகைப் பழங்கள் இருக்கின்றன. கடைக்காரன் இவைகளை வரிசை வரிசையாக அடுக்கி வைத்திருக்கிறான். வாழைப்பழம், மாம்பழம்,பலாப்பழம், கிச்சிலிப் பழம், மாதுளம்பழம், கொடி முந்திரிப்பழம் இவைகள் படத்தில் காணப்படுகின்றன. பழங்கள் பொதுவாகத் தித்திக்கும். சில பழங்கள் இனிப்பாய் இரா.

வாழைப் பழம் வாழை மரத்தில் உண்டாகிறது. இது எல்லா மாதங்களிலும் கிடைக்கும். வாழைத் தாரில் பழங்கள் சீப்புச் சீப்பாய் இருக்கும். பூவன், மொந்தன், ரஸ்தாளி, பச்சை வாழை, செவ்வாழை என வாழைப் பழங்களில் பல விதம் உண்டு.

மாம்பழம் அதிக ருசி யுள்ளது. இது மா மரத்தில் உண்டாகிறது.மாம்பழத்திலும் அநேக விதங்கள் உண்டு. இந்தப் பழத்தில் கொட்டை இருக்கிறது.

பழங்களில் பெரியது பலாப்பழம். இது பலா மரத்தின் அடி மரத்திலும், கிளைகளிலும் பழுத்துத் தொங்கும். பழத்தின் உள்ளே சுளை கள் உண்டு. சுளைகளைத் தின்றால் இனிப்பாய் இருக்கும். ஒவ்வொரு சுளையிலும் கொட்டை இருக்கிறது.

கிச்சிலிப் பழத்தின் தோலை உரித்தால் சிறு சுளைகள் இருக்கும். இந்தச் சுளைகளில் ரஸம் நிரம்பிய முத்துக்களையும் விதைகளையும் காண லாம். கிச்சிலிப் பழத்தை 'ஆரெஞ்சு' என்றும் சொல்லுவார்கள்.

மாதுளம் பழம் செடிகளில் உண்டாகும். இதன் உள்ளே சிவந்த முத்துக்கள் இருக் கின்றன. இந்த முத்துக்கள் இனிக்கும். சில மாதுளை புளிப்பதும் உண்டு. மாதுளந் தோல் துவர்க்கும்.

பச்சைத் திராக்ஷைப் பழம் குலை குலையாக இருக்கும். கொடிகளில் உண்டாவதால் இவை களைக் கொடி முந்திரிப்பழம் என்றும் சொல்லு வார்கள். இவைகளிலும் ரஸம் அதிகம்.

பழங்களை உண்பது உடம்புக்கு நல்லது. ஆனால் நன்றாய்ப் பழுக்காதவைகளையும் அழுகியவைகளையும் புசிக்கலாகாது. சாப்பாட்டுக்குப் பிறகு இரண்டொரு பழங்களைத் தின்பது நலம்.

சொல் பயிற்சி :

I. 1. வாழைப் பழம்
2. மாம் பழம்
3. பலாப் பழம்

இவை முப்பழம் எனப்படும்.

II. 1. சர்க்கரை தித்திக்கும்.
2. எலுமிச்சம் பழம் புளிக்கும்.
3. உப்புக் கறிக்கும் அல்லது உவர்க்கும்.
4. மிளகாய் உறைக்கும்.
5. வேப்பிலை கசக்கும்.
6. பாக்குத் துவர்க்கும்.

தித்திப்பு, புளிப்பு, உவர்ப்பு, உறைப்பு, கசப்பு, துவர்ப்பு, இவை அறு சுவை எனப்படும்.

III. 1. தார் தாராய்
2. சீப்புச் சீப்பாய்
3. குலை குலையாய்
4. கொத்துக் கொத்தாய்

———



35. இரண்டு பரதேசிகள்

முதல் பரதேசி :—(இந்த ஊரில் மூன்று தினங்கள் தங்கியாகி விட்டது. 'ஓடு நமக்கு உண்டு, வற்றாத பாத்திரம்.' ஆதலால் இனி அடுத்த ஊருக்குப் பிச்சை யெடுக்கப் போகலா மென்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டு போகிறான். அதே பாதையில் மற்றொரு பரதேசி வந்து சேருகிறான். அவனைப் பார்த்து):—பரதேசியே! நமஸ்காரம்.

இரண்டாவது பரதேசி :—என்ன ஐயா! நான் ஆண்டி. நீ பெரிய பணக்காரனோ? என்னைப் பரதேசி யென்று ஏளனம் செய்கிறாயே!

முதல் பரதேசி :—ஏற்பது இகழ்ச்சியே. பிச்சைக்காரர் பிச்சைக்காரர் தான். நீயும் என்னைப் பரதேசி என்றே கூப்பிடு. இதற்கு ஏன் இவ்வளவு கோபம்? இப்பொழுது எங்கே போகிறாய்?

இரண்டாவது பரதேசி :—அதோ தெரிகிறதே அந்த ஊருக்குப் போகிறேன். வேண்டுமானால் நீயும் வா; இருவரும் சேர்ந்தே போவோம்.

(இருவரும் பின்வரும் பாட்டைப் பாடிக் கொண்டு ஒரு தென்னந் தோப்பு வழியாகப் போகிறார்கள்.)

நந்த வனத்தி லோராண்டி—அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டு வந்தானொரு தோண்டி—அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி
(நந்த.)

(காற்றடித்து ஒரு தேங்காய் நெற்று விழுகிறது.)

இரண்டாவது பரதேசி :—அதோ பார்! ஒரு தேங்காய் விழுகிறது.

முதல் பரதேசி :—நான் எடுக்கிறேன்.

(ஓடிப்போய்த் தேங்காயை எடுத்து வருகிறான்.)

இரண்டாவது பரதேசி :—இதை என்னிடம் கொடுத்து விடு.

முதல் பரதேச் :—நான் தான் எடுத்தேன். நானே வைத்துக்கொள்வேன்.

இரண்டாவது பரதேசி :—முடியாது. எனக்குத் தான் உண்டு. (என்று காயைப் பிடித்து இழுக்கிறான்.)

முதல் பரதேசி :—நான் கொடுக்கவே மாட்டேன். (இருவரும் சண்டையிடுகிறார்கள். அப்பொழுது வழிப்போக்கன் ஒருவன் வருகிறான்.)

வழிப்போக்கன் :—பரதேசிகளே! நீங்கள் ஏன் சண்டை போடுகிறீர்கள்?

முதல் பரதேசி :—இந்தத் தேங்காய் விழுந்தவுடன் நான் எடுத்தேன். அது தன்னைச் சேர்ந்தது என்று அவன் வழக்காடுகிறான்.

வழிப்போக்கன் (இரண்டாவது பரதேசியைப் பார்த்து) :—நீர் என்ன சொல்லுகிறீர்?

இரண்டாவது பரதேசி:—ஐயா! காற்று வீசியது. இந்த நெற்று விழுந்தது. விழுகிறதை நான் தான் முதலில் பார்த்துச் சொன்னேன். இவன் ஓடிப்போய் எடுத்து வந்து எனக்கு அதைத் தர முடியாது என்கிறான். நீங்கள் நியாயத்தை விசாரித்துத் தீர்த்து விடுங்கள்.

முதல் பரதேசி :—நீங்கள் தீர்த்து விடுகிறபடி செய்ய எனக்கும் சம்மதம்.

வழிப்போக்கன் (தேங்காயை வாங்கி மட்டையை உரித்து, காயை உடைக்கிறான். கொப்பறையைத் தனக்கு வைத்துகொள்ளுகிறான். இரண்டாவது பரதேசியைப் பார்த்து) :—நீர் தேங்காய் விழும்பொழுது

முதலில் பார்த்ததினுல் இந்தக் கண்ணுள்ள கொட்டாங்கச்சியை எடுத்துக் கொள்ளும். கையை ஏந்திப் பிச்சை வாங்குவதைவிட இந்தக் கொட்டாங்கச்சியில் வாங்குவது நல்லது அல்லவா? (என்று அவன் கையில் அதைக் கொடுத்தான்.)

(பிறகு முதல் பரதேசியைப் பார்த்து):—நீர் விழுந்த தேங்காயை எடுத்ததனுல், உமக்கு இந்தக் கொட்டாங்கச்சி உரித்தானது. நீரும் பிச்சைப் பாத்திரமாக இதை வைத்துக் கொள்ளும். (மேல் கொட்டாங்கச்சியை அவன் கையில் கொடுக்கிறுன்.) ஓடு உங்களுக்குப் பிச்சையெடுக்க வற்ருத பாத்திரம். நீங்கள் போகலாம். (பரதேசிகள் போகிறுர்கள்.)

வழிப்போக்கன் (தனக்குள்ளே) :—பேஷ்! நல்ல வழக்குத் தீர்த்தேன். இந்தத் தேங்காயைச் சர்க்கரையுடன் கலந்து சாப்பிடுவேன். (என்று சொல்லித் தன் வழியே போகிறுன்.)

பரதேசிகள் (சற்றுத் தூரம் போய்) :—ஐயோ! நாம் சண்டையிட்டதால் தேங்காயைக் கண்டெடுத்த நமக்குக் கொட்டாங்கச்சி மட்டுமே. இடையில் வந்த வழிப்போக்கனுக்கோ தேங்காய்ப் பருப்பு! 'வழக்காளி பொருள் இழந்தான்' என்பது நமக்கே பலித்தது.

சொல் பயிற்சி :

கொட்டாங்கச்சி—இதைச் சில ஜில்லாக்களில் சிரட்டை என்பார்கள்.

ஆத்திசூடி

---

1. அறஞ் செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. ஈவது விலக்கேல்.
5. உடையது விளம்பேல்.
6. ஊக்கமது கைவிடேல்.
7. எண்ணெழுத் திகழேல்.
8. ஏற்ப திகழ்ச்சி.
9. ஐய மிட்டுண்.
10. ஒப்புர வொழுகு.
11. ஓதுவதொழியேல்.
12. ஔவியம் பேசேல்.
13. தந்தை தாய்ப்பேண்.
14. நன்றி மறவேல்.
15. பருவத்தே பயிர் செய்.
16. இளமையிற் கல்.
17. கேள்வி முயல்.
18. செய்வன திருந்தச் செய்.
19. நோய்க்கிடங் கொடேல்.
20. வித்தை விரும்பு.

உலக நீதி

1. ஓதாமல் ஒருநாளும்
இருக்க வேண்டாம்.
2. ஒருவரையும் பொல்லாங்கு
சொல்ல வேண்டாம்.
3. மாதாவை ஒருநாளும்
மறக்க வேண்டாம்.
4. வஞ்சனைகள் செய்வாரோடு
இணங்க வேண்டாம்.
5. போகாத இடந்தனிலே
போக வேண்டாம்.
6. போகவிட்டுப் புறஞ்சொல்லித்
திரிய வேண்டாம்.
7. நெஞ்சாரப் பொய்தன்னைச்
சொல்ல வேண்டாம்.
8. நஞ்சுடனே ஒருநாளும்
பழக வேண்டாம்.
9. அஞ்சாமல் தனிவழியே
போக வேண்டாம்.
10. அடுத்தவரை ஒருநாளும்
கெடுக்க வேண்டாம்.

503
-154

11. மனம்போன போக்கெல்லாம்
போக வேண்டாம்.

12. தருமத்தை ஒருநாளும்
மறக்க வேண்டாம்.

13. குற்றம் ஒன்றும் பாராட்டித்
திரிய வேண்டாம்.

14. கொலை, களவு செய்வாரோடு
இணங்க வேண்டாம்.

15. கற்றவரை ஒருநாளும்
பழிக்க வேண்டாம்.

16. தனத்தேடி உண்ணாமல்
புதைக்க வேண்டாம்.

17. செய்த நன்றி ஒருநாளும்
மறக்க வேண்டாம்.

18. புண்படவே வார்த்தை தனைச்
சொல்ல வேண்டாம்.

19. மூத்தோர் சொல் வார்த்தை தனை
மறக்க வேண்டாம்.

20. மதியாதார் தலைவாசல்
மிதிக்கவேண்டாம்.

21. எளியாரை எதிரிட்டுக்
கொள்ள வேண்டாம்.

22. இறந்தாலும் பொய்தன்னைச
சொல்ல வேண்டாம்.

Printed at the Royal Printing Works, Mount Road, Madras.

3B
2-154